Registered No. M-4345.

யுத்த சஞ்சிகை.

மலர் I.] 1941-ம் ஞு ஜூன் மீ 13உ, வெள்ளிக்கிழமை. [இதழ் 13

வாரச் செய்திக் குறிப்புகள்.

1. ஜெர்மனியிலும், பிரிட்டனிலும், இதர இடங்களிலும் ஆகாய விமானப் போர்.

மேற்கு ஜெர்மனியை, பிரிட்டிஷ் வெடி குண்டு படை சென்ற வாரம் தாக்கியது. முக்கியமாக, எஸ்ஸென், டார்ட்மண்ட், என்ற இடங்களின் மேல் வெடி குண்டுகள் போடப்பட்டன. அதன் பயனாக, பெருநெருப்புகள் உண்டாக்கப்பட்டன. முதலில் விமானங்கள் போகும் போது மேகங்கள் அதிகமாயிருந்தன; பின்பு பரிசுத்தமான வானம் தென்பட்டது. வெண்ணிலாவினுடைய வெளிச்சத்தில் பல இடங்கள் நன்றாய்த் தெரிந்தன. இதைப் பற்றி ஒரு விமான ஓட்டி கூறியதாவது:—“நிலா வெளிச்சத்தில், ரைன் நதி எங்களுக்கு மிக நன்றாய்த் தெரிந்தது. இதனால் மற்ற இடங்களைக் கண்டு பிடிப்பது சுலபமாய் இருந்தது. டார்ட்மண்ட்—எம்ஸ் கால்வாய்க்குப் பக்கத்தில் உள்ள கப்பற்சாலைகளைப் பார்த்தோம்; அவைகளின் மேல் வெடி குண்டுகளைப் போட்டோம். கால் மணி நேரத்துக்குப் பிறகு நாங்கள் வீட்டுக்குத் திரும்பிப்போகும் போது, எங்களால் ஆரம்பிக்கப்பட்ட நெருப்புகள் எரிந்து கொண்டிருப்பதைக் கண்டோம். ரூர் பிரதேசத்தில் இன்னும் பல இடங்கள் நெருப்புப் பற்றிக்கொண்டு எரிவதைக் கண்டோம்.”

ரூர் பிரதேசத்தில், தொழிற்சாலைகள், கப்பற்சாலைகள், ரயில்வேக்கள், இவைகளின் மேல் வெடி குண்டுகள் போடப்பட்டன. எல்லா இடங்களையும் விட டார்ட்மண்டு பிரதேசம்தான் வெடி குண்டுகளால் பலமாகத் தாக்கப்பட்டது; டார்ட்மண்டு பட்டணத்திலும், கப்பற்சாலைகளிலும், ரயில்வேயிலும் நெருப்புப் பற்றிக்கொண்டு எரிந்தது.

பிரிட்டிஷ் ஆகாய விமானப்படை, மேற்கு ஜெர்மனியிலும், வடமேற்கு ஜெர்மனியிலும், பல இடங்களில் வெடி குண்டுகளைப் போட்டது என்று உத்தியோக பூர்வமான ஜெர்மன் சமாச்சார ஸ்தாபனம் ஒப்புக்கொள்ளுகிறது.

ஜெர்மனியின் ஆதிக்கத்திலுள்ள சில நாடுகள் மேலும் பிரிட்டிஷ் விமானப்படை சென்றவாரம் வெடி குண்டுகளைப் போட்டது. வடமேற்கு பெல்ஜியத்திலுள்ள சீபுரூஷ் என்ற இடம் பட்டப்பகலில் தாக்கப்பட்டது. இது கடலோரத்திலுள்ள துறைமுகப் பட்டணம். இதன் கரையோரப் பாது காப்புக் கட்டடத்தின் மேல் பல வெடி குண்டுகள் விழுந்தன. 3,000 டன் கப்பல் ஒன்று சுக்கல் சுக்கலாய்ப் போய் விட்டது. அதனுடைய கொடி மரமும், மேல் தளமும் தண்ணீருக்கு மேல் தெரிந்தன. 500 டன் கப்பலொன்று வெடி குண்டுகளால் உடைத்துத் தகர்க்கப்பட்டது.

நார்வேயின் கரையோரத்தில் 5,000 டன் எடையுள்ள ஒரு ‘சப்ளை’ கப்பல், பிரிட்டிஷ் விமானங்களால் தாக்கப்பட்டு, நெருப்புக் கிரையாக்கப்பட்டது.

சீபுரூஷ் துறை முகத்தையும், நார்வேயின் கடலோரத்தையும், தாக்கியதன் பிறகு, இரண்டு பிரிட்டிஷ் விமானங்கள் திரும்பி வரவேயில்லை.

பிரெஞ்சுக் கரையோரப் பட்டணமாகிய பலோன், பிரிட்டிஷ் வெடி குண்டு விமானங்களால் தாக்கப்பட்டது. கப்பற்சாலைகள் மேலும், கப்பல்கள் மேலும் வெடி குண்டுகள் போடப்பட்டன.

பிரான்சுக்கு மேற்கில் இருக்கும் பிஸ்கே குடாக் கடலில் ஒரு ஜெர்மன் கடல் விமானம் சுட்டு வீழ்த்தப்பட்டது.

பிரான்சின் வடமேற்கு முனையிலுள்ள பிரெஸ்ட் என்ற கடற்கரைப் பட்டணம், பிரிட்டிஷ் விமானங்களால் தாக்கப்பட்டது. ஜெர்மனியின் கடற்படைத் தளமாகிய பிரெஸ்ட்டில் உள்ள கப்பற்சாலைகளின் மேல் சட்டு கட்டாக வெடி குண்டுகள் போடப்பட்டன.

நார்வேயிலுள்ள பர்ஜன் என்ற பட்டணத்தின் கப்பற்சாலைகளும், கப்பல்களும் தாக்கப்பட்டன.

நார்வேயிலிருந்து மத்திய தரைக் கடலுக்கு வரும் கப்பல்களை பிரிட்டிஷ் விமானங்கள் தாக்கிக்கொண்டு வருகின்றன.

இங்கிலாந்தில் சென்றவாரம் ஜெர்மன் ஆகாய விமானங்கள் சில இடங்களில் வெடிகுண்டுகளைப் போட்டன. இங்கிலீஷ் கால்வாய்க்குமேல், எதிரிகளின் நான்கு விமானங்கள், பிரிட்டிஷ் விமானங்களால் சுட்டு நாசமாக்கப்பட்டன. இந்தச் சண்டையில் இரண்டு பிரிட்டிஷ் விமானங்கள் இழக்கப்பட்டன.

இங்கிலாந்தில், மேற்கு மிட்லாண்ட்ஸ் பிரதேசம் ஜெர்மன் விமானங்களால் தாக்கப்பட்டது. ஜெர்மன் விமானங்கள் விமான எதிர்ப்புப் பீரங்கிகளால் கடுமையாகச் சுடப்பட்டன. பிரிட்டனில், ஐந்து ஜெர்மன் விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டன.

எப்ரல் 22-ந்தேதிக்குப் பிறகு, முதன் முதலாக லண்டனில் சென்ற வாரத்தில் பகல் நேரத்தில் விமான எச்சரிக்கை அறிவிப்பு ஒலிக்கப்பட்டது. பிறகு கொஞ்ச நேரத்துக்கெல்லாம் அபாயமில்லை என்ற அறிவிப்பு ஒலிக்கப்பட்டது. எங்கும் வெடிகுண்டுகள் விழுந்ததாகத் தெரியவில்லை. வடகிழக்கு இங்கிலாந்தில், இரண்டு இடங்களில் சென்ற வெள்ளிக்கிழமை வெடி குண்டுகள் போடப்பட்டன. ஒருவருக்கும் காயமில்லை.

ஸ்காத்லாந்தின் சில பாகங்களின்மேல் எதிரிகளின் விமானங்கள் பறந்து வெடிகுண்டுகள் போட்டன. அதிகமான சேதம் ஒன்றும் உண்டாகவில்லை. காயப்பட்டவர்களின் எண்ணிக்கை மிகவும் குறைவு.

இங்கிலாந்தின் தென் கிழக்கு கரை யோரத்தில், ஜெர்மன் விமானங்கள் வெடிகுண்டுகளைப் போட்டன. நடந்த சண்டையில் இரண்டு ஜெர்மன் விமானங்கள் சுட்டு கடலில் வீழ்த்தப்பட்டன.

கார்ன்வால் கரையோரப்பட்டண மொன்றின்மேல் ஜெர்மன் விமானங்கள் சில வெடிகுண்டுகளைப் போட்டன. அதன்பயனாக, சில வீடுகள் நாசமாக்கப்பட்டன; சிலர் உயிரிழந்தார்கள்; சிலர் காயமடைந்தார்கள்.

பிரிட்டிஷ் விமானங்கள், நார்வே, ஹாலந்து, பெல்ஜியம், பிரான்சு இவைகளின் கரையோரங்களில் இருந்த கப்பல்கள்மேல் வெடிகுண்டுகளைப் போட்டன. ஒரு ஜெர்மன் வெடிகுண்டு விமானம், இங்கிலாந்தின் மேற்குக்கரை ஓரத்தில், சுட்டு வீழ்த்தப்பட்டு கடலில் விழுந்துவிட்டது.

“இன்னும் அதிகக் கடுமையான விமானத் தாக்குதல்கள் வந்தாலும் அதற்கு எல்லாவிதத்திலும் தயாராயிருக்கிறோம்” என்று லார்டு பீவர்புருக் (பிரிட்டிஷ் அரசாங்க மந்திரி) லார்டு சபையில் கூறினார்.

சென்ற வியாழக்கிழமை மாலை (ஜூன் 12) பிரிட்டிஷ் விமானப்படை, பிரெஞ்சுக்கரையோரத்தில் உள்ள கப்பல்களையும், இச்முய்தின், டங்கர்க், நார்தானி என்ற கடற்படைத்தளம், கலே, ரூர் தொழிற்சாலைப் பிரதேசம், தூஸ்பர்க், தூசல்தார்ப் முதலிய இடங்களைத் தாக்கி சேதம் விளைவித்தது. ஜெர்மன் விமானப்படை சென்ற புதன்கிழமை பிரிட்டன்மேல் பறந்து பல இடங்களில் வெடிகுண்டுகளைப் போட்டன. பல வீடுகள் நாசமாக்கப்பட்டன. சிலர் உயிரிழந்தார்கள்.

2. ஆப்பிரிக்காவும், மத்தியதரைக்கடலும்.

வட ஆப்பிரிக்காவில், எகிப்தின் துறைமுகப்பட்டணமாகிய அலெக்சாண்டிரியாவை எதிரிகளின் ஆகாய விமானங்கள் தாக்கின. பலத்த வெடிகுண்டுகளும், அக்கினிக்குண்டுகளும், போடப்பட்டன. அநேக வீடுகள் நாசமாயின; உயிரிழந்தவர்கள் 150-க்கு அதிகமாயிருந்தார்கள். காயமடைந்தவர்கள் 20 -க்கு மேலிருந்தார்கள். எகிப்தில் இவ்வளவு பலமான விமானத்தாக்குதல் இதற்கு முன் கிடையாது என்று சொல்லப்படுகிறது. விமான எதிர்ப்புப் பீரங்கிகள் இடைவிடாது சுட்டன. வெடிகுண்டுகளால் நாசமாக்கப்பட்ட பிரதேசங்களை, எகிப்தின் முதல் மந்திரி பார்வையிட்டார்.

அலெக்சாண்டிரியா வெடிகுண்டுகளால் தாக்கப்பட்டதைப் பற்றியும், ராணுவத்தில் சேராத மக்கள் மேல் வெடிகுண்டுகள் போட்டதைப்பற்றியும் லண்டனில் மிகுந்த அனுதாபம் காட்டப்படுகிறது.

எகிப்திய அரசாங்கம் இந்தத் தாக்குதலைக்குறித்து, அச்சு அரசுகளுக்குத் தன்னுடைய ஆட்சேபனையைத் தெரிவித்திருக்கிறது. அதனால் உண்டான நஷ்டத்திற்கு நஷ்ட ஈடு கொடுக்கும்படி, ஜெர்மனியையும், இடலியையும் கேட்டிருக்கிறது.

இரண்டாவது தடவை, அலெக்சாண்டிரியா வெடிகுண்டுகளால் தாக்கப்பட்டது. இதைக் குறித்து, எகிப்தின் உள்நாட்டு மந்திரி சபை ஒரு அறிக்கை வெளியிட்டிருக்கிறது. அந்த அறிக்கை கூறுவதாவது :—“ அநேக வெடிகுண்டுகள் போடப்பட்டன. பலத்த சேதம் எற்பட்டிருக்கிறது. இறந்து போனவர்களும், காயமடைந்தவர்களும் அதிகமாயிருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.”

எகிப்தின் அரசர் பரூக்கும், அவருடைய அரசியும், வெடிகுண்டு விழுந்த பிரதேசங்களைப் பார்வையிட்டுவிட்டு, காயமடைந்து ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வருபவர்களைப் போய்ப் பார்த்தார்கள்.

அலெக்சாண்டிரியாவை விட்டு விட்டு எராளமான மக்கள் வெளியே செல்கிறார்கள். சென்ற ஞாயிற்றுக்கிழமை 40,000 பேர் இப்படிச் சென்றிருக்கிறார்கள் என்று ஒரு அராபிய பத்திரிகை கணக்கிட்டிருக்கிறது. கெய்ரோ மாகாணத்துக்குப் போகும்படி அரசாங்கத்தார் பிரத்தியேகமான ரயில் வண்டிகளை விடுகிறார்கள். எழை மக்கள் யாதொரு கட்டணமும் இல்லாமல் அலெக்சாண்டிரியாவிலிருந்து ரயிலில் செல்ல அனுமதிக்கப்படுகிறார்கள்.

வெடிகுண்டுகளால் சேதமடைந்த பிரதேசங்களில், ரக்ஷிப்பு வேலை செய்வதற்காக, எகிப்திய அரசாங்கத்தார், 3 லட்சம் பவுன் கடன் கொடுத்திருக்கிறார்கள்

அலெக்சாண்டிரியாவின் துக்ககரமான நிலைமையைப்பற்றி எகிப்திய முதல் மந்திரி குறிப்பிட்டிருக்கிறார். அவர் கூறுவதாவது: “நம்முடைய நாடு ஒரு முஸ்லீம் நாடு, நாம் கடவுளிடம் நம்பிக்கைகொண்டிருக்கிறோம். எவ்வளவு கஷ்டம் வந்தாலும் அதைப் பொருக்கும்படி நம்முடைய இருதயங்களைக் கடினப்படுத்தி வைத்துக்கொள்ளவேண்டும்.”

வட ஆப்பிரிக்காவுக்கும், சிசிலிக்கும் இடையில் மத்தியதரைக் கடலில் உள்ள மால்டா என்ற பிரிட்டிஷ் தீவு எதிரி விமானங்களால் தாக்கப்பட்டது. சில வெடிகுண்டுகள் போடப்பட்டன. ஆனால் யாதொரு சேதமும் எற்படவில்லை. மெசர் சிமிட்ஸ் என்ற புதிய ஜெர்மன் விமானங்கள் பல மால்டாவைத்தாக்கின. பிரிட்டிஷ் விமானங்கள் அவைகளைத் துரத்திவிட்டன.

இந்தியா மந்திரி, மிஸ்டர் அமெரி, மால்டாவின் மக்களுக்கு ஒரு செய்தி அனுப்பியிருக்கிறார். அதில், எதிரிகளின் தாக்குதலைச் சகித்துவருவதற்காக, தன்னுடைய பாராட்டுதலையும், அனுதாபத்தையும் அவர்களுக்குத் தெரிவித்திருக்கிறார்.

மால்டா ஒரு படையெடுப்புக்குத் தயாராயிருக்க வேண்டும் என்று அத்தீவின் கவர்னர், லெப்டினண்ட்-ஜெனரல் டோப்பி ‘ரேடியோ’ மூலம் அறிவித்திருக்கிறார். அவர் கூறியதாவது : “ கிரீட்டைவிட மால்டா எதிரிகளின் தாக்குதலைத் தடுப்பதற்குத் திறமையுள்ளதாய் இருக்கிறது. இந்த அபிப்பிராயம் பொறுப்புள்ள உத்தியோகஸ்தர்கள் கொண்டுள்ள அபிப்பிராயமாகும். மால்டாவை நாங்கள் கைவிடப் போவதில்லை. ஜெர்மானியர்களாவது, இத்தாலியர்களாவது மால்டாவைக் கைப்பற்றுவதற்கு நாங்கள் விடமாட்டோம்.”

சென்ற வாரம், லிபியாவில் உள்ள பென்காசி என்ற துறைமுகப் பட்டணம் பிரிட்டிஷ் ஆகாய விமானங்களால் மீண்டும் தாக்கப்பட்டது. கரையோரப் பாதுகாப்புக் கட்டடங்கள் மேல் வெடிகுண்டு விழுந்தது. மத்திய பாகம் பழுதாக்கப்பட்டது, அநேக இடங்களில் நெருப்புப்பற்றிக்கொண்டது.

ரோட்ஸ் தீவிலிருக்கும் மாரிட்சா என்ற ஆகாய விமானச்சாலை, பிரிட்டிஷ் விமானங்களால் தாக்கப்பட்டது. விமானச்சாலை கட்டடம் பழுதாக்கப்பட்டது. கீழே பரவியிருந்த விமானங்கள் மேல் பல வெடிகுண்டுகள் விழுந்தன.

அபிசீனியாவில், எதிரிகள் கையிலிருக்கும் சில இடங்களின்மேல் வெடிகுண்டுகள் போடப்பட்டன. காசியா பிரதேசத்தில், தென்னாப்பிரிக்க விமானங்கள் தாக்கியபோது, அங்குள்ள அநேக சிறு படைகள் நெருப்புகளைக்கொளுத்தி, வெள்ளைக்கொடியை அசைத்து சரணகதியடைய விரும்புவதான பான்மையைத் தெரிவித்தன. அபிசீனியாவில் சென்ற வாரம் கிழக்காப்பிரிக்கத் துருப்புகளும், மேற்காப்பிரிக்கத் துருப்புகளும், 2,000 கைதிகளையும், 14 பீரங்கிகளையும் கைப்பற்றிக்கொண்டன. பெரிய ஓமோ ஆற்றைக்கடந்து, ஜிம்மாவை நோக்கி முன்னேறிச் சென்றுகொண்டிருக்கின்றன. அபால்டி என்ற இடம் பிடிக்கப்பட்டது.

இத்தாலிய ராணுவத் தலைமைக் காரியாலயத்திலிருந்து, ஆப்பிரிக்க யுத்தத்தில் இத்தாலிக்கு நேர்ந்த நஷ்டங்களின் விவரங்கள் ஒரு அறிக்கை மூலமாக கொடுக்கப்பட்டிருக்கின்றன. வடக்காப்பிரிக்காவில், இறந்தவர்கள் 329, கரயப்பட்டவர்கள் 752, காணமற்போனவர்கள் 23 919 ; கிழக்காப்பிரிக்காவில் இறந்தவர்கள் 58, காயப்பட்டவர்கள் 77, காணமற்போனவர்கள் 2,[illegible]54. “ காணமற்போனவர்கள் ” என்று கணக்கிடப்பட்டவர்களில் பெரும்பாலோர் பிரிட்டிஷாரின் கைதிகளாயிருக்கிறார்கள்.

கிழக்காப்பிரிக்காவில் இந்தியத்துருப்புகள் பெரும் புகழடைந்திருக்கின்றன. இத்தாலியின் சோமாலிலாந்து கவர்னரையும், அநேக உயர்தர ராணுவ உத்தியோகஸ்தர்களையும், மராத்தி துருப்புகள் கைதிகளாகப் பிடித்துவிட்டன.

3. அமெரிக்காவும், அட்லாண்டிக் கடலும்.

அமெரிக்க கப்பற்படை, பிரிட்டிஷ் கப்பலோட்டிகளைப் பயிற்சிசெய்வித்து தயார் செய்யப்போவதாக அமெரிக்க கப்பற்படை மந்திரி, கர்னல் நாக்ஸ், அறிவித்தார். இந்தப் பயிற்சிக்காக முதலில் 3,000 பிரிட்டிஷார்கள் வருவார்கள் என்று தெரிகிறது. பிரிட்டன் புதிதாக நாசகாரிகள் வேண்டுமென்று அமெரிக்காவைக் கேட்கவில்லை என்றும், அதிகமாக வர்த்தகக் கப்பல்கள் வேண்டுமென்று கேட்டிருக்கிறதென்றும், கர்னல் நாக்ஸ் தெரிவித்தார்.

அட்லாண்டிக் கடலில், அமெரிக்க கடற்படையின் பிரதம தளகர்த்தர், அட்மிரல் கிங், கர்னல் நாக்சுடனும், கடற்படைப்போர் எற்பாட்டுத் தலைவர், அட்மிரல் ஸ்டார்க்குடனும், இதர உத்தியோகஸ்தர்களுடனும் கலந்து பேசினார்.

அமெரிக்க விமானக் குடையாளர்களுக்கு (‘ பாரஷூட்டிஸ்ட்ஸ் ’) சம்பளம் அதிகப்படுத்தப்பட்டது. அது சம்பந்தமான ஒரு மசோதாவில் பிரசிடெண்ட் ரூஸ்வெல்ட் கையெழுத்திட்டிருக்கிறார்.

அமெரிக்காவின் முதல் பட்டாளம் யுத்தசன்னத்தமாயிருக்கிறதென்றும், சென்ற மகாயுத்தத்தில், இந்தப் பட்டாளம்தான் முதலில் ஜெர்மனியர்களைக் கைது செய்ததென்றும், அமெரிக்கப் பட்டாளத் தலைவர், ஜெனரல் மார்ஷல், சட்டசபைக் கமிட்டிக் கூட்டத்தில் கூறினார்.

அமெரிக்க பட்டாளத்துக்கு ‘ சப்ளை ’ செய்வதற்காக 1,000 கோடி டாலர்கள் செலவிடப்படும். இந்தத் தொகை அனுமதிக்காகச் சட்டசபைக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. சென்ற யுத்தகாலத்திற்குப்பிறகு ஒரு குறிப்பிட்ட விஷயத்துக்காக இவ்வளவு பெரிய தொகை செலவிடப்படுவது இதுதான் முதல் தடவையாகும். இந்தச் செலவினத்தில்,

அமெரிக்க விமானப் படைக்கு 40,000 விமானங்களை செய்துகொடுப்பதற்கு வேண்டிய தொகையும் அடங்கியிருக்கிறது.

யுத்த உதவி மந்திரி, மிஸ்டர் ராபர்ட் பேடர்சன், சட்ட சபைக்கமிட்டியிடம் சாட்சியம் கொடுக்கும்போது கூறியதாவது:—"யுத்த இலாகாவில் இருக்கும் நாங்கள் ஒவ்வொருவரும், இந்தத் திட்டத்தின்படி கொடுக்கப்படும் 40,000 விமானங்களுக்கும் ராணுவ அவசியம் கூடிய சீக்கிரத்தில் ஏற்படும் என்று அபிப்பிராயப் படுகிறோம். இப்போது ஜெர்மனி ஒரு மாதத்தில் குறைந்த பட்சம் 3,000 விமானங்கள் உற்பத்தி செய்கிறதென்றும், ஜெர்மனியின் ஆதிக்கத்திலுள்ள நாடுகளில் உற்பத்தியாகிறதைக் கணக்கிட்டால், 4,000-த்திலிருந்து 6,000 வரைக்கும் மாத உற்பத்திக் கணக்கு என்று வைத்துக்கொள்ளலாம்."

பிரிட்டனில் அமெரிக்க ஸ்தானீகராயிருக்கும் மிஸ்டர் வினண்டு, பிரசிடெண்ட் ரூஸ்வெல்டிடம் பிரிட்டனில் உள்ள யுத்த நிலைமையை வெகு விளக்கமாக எடுத்துக் கூறினார். பிரிட்டனின் பொருளாதார நிலைமை, உணவுப்பொருள் நிலைமை, சமுதாய நிலைமை முதலியவைகளைப்பற்றியும், பிரசிடெண்டுக்கு விவரித்துக் கூறினார். "பிரிட்டனின் யுத்த அனுபவம் அமெரிக்காவுக்கு மிக முக்கியமானது" என்று மிஸ்டர் வினண்டு பத்திரிகை நிருபர்களிடம் கூறினார்.

மிஸ்டர் வினண்டு, சமாதான ஏற்பாடுகளைப்பற்றி பிரசிடெண்ட் ரூஸ்வெல்டிடம் பேசுவதாக ஜெர்மன் ரேடியோ பொய்ப் பிரசாரம் செய்துவந்தது. அதை பிரசிடெண்ட் ரூஸ்வெல்ட் முழுவதும் மறுத்துவிட்டார். சமாதானப் பேச்சுக்கு யாதொரு ஆதாரமுமில்லை என்று அவர் வற்புறுத்திக் கூறினார். மிஸ்டர் வினண்டு அமெரிக்காவுக்கு வந்த காரணம், பிரிட்டன் பாதுகாப்பு நிலைமையைப்பற்றித் தனக்கு அறிவிப்பதற்கும், அமெரிக்காவில பாதுகாப்பு சம்பந்தமான விஷயங்களை விவரமாக அறிந்து பிரிட்டனுக்கு அறிவிப்பதற்காகவும் தான் என்று பிரசிடெண்ட் ரூஸ்வெல்ட் தெரிவித்தார்.

ஜெர்மன் சப்மரீன்கள், இராக்காலங்களில் கடலுக்குள்ளிருந்து மேலே வந்திருக்கும்போது அவைகளை தூரத்தில் விரட்டி விடுவதற்காக ஒரு புதிய விசை கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது.

"ராபின்மூர்" என்ற அமெரிக்கக் கப்பல், தென் அட்லாண்டிக் கடலில் ஒரு ஜெர்மன் சப்மரீன் வெடிகுண்டினால் ('டார்பிடோ'வினால்) தாக்கப்பட்டு, டாக்கர் என்ற இடத்துக்கருகில் முழுகடிக்கப்பட்டதென்று தெரிகிறது. அக்கப்பலில் இருந்த 11 பேர் 19 நாட்களாக ஒரு படகில் தடமாடிக்கொண்டிருந்து, கடைசியில் "ஓசோரியோ" என்ற பிரேசில் நாட்டுக் கப்பலால் தப்புவிக்கப்பட்டார்கள். "ராபின்மூர்" கப்பல் மேமீ 21வ முழுகடிக்கப்பட்டது என்று தெரிகிறது.

அமெரிக்காவிலிருந்து யுத்த சாமான்கள் அதிகப்படியாக பிரிட்டனுக்கு அனுப்பப்பட்டு வருகிறது. கூடிய சீக்கிரம் யுத்த சாமான்களில் அச்சு அரசுகளைவிட பிரிட்டன் மேன்மையான நிலைமையை அடைந்துவிடுமென்றும், வாடகை-கடன் சட்டத்தின் கீழ், 7 கோடியே 50 லட்சம் டாலர் பொறுமான பாதுகாப்பு யுத்த சாமான்கள் இப்போது அனுப்பப்படுகின்றனவென்றும் பிரசிடெண்ட் ரூஸ்வெல்ட் தெரிவித்தார். 20 லட்சம் டன் எடையுள்ள சாமான்கள் கப்பல்கள் பிரிட்டனுக்கு மாற்றப்பட்டிருக்கிறது.

குடியரசுக்கும், சர்வாதிகாரத்தனத்துக்கும் எந்த விதமான சமாதானமும் இருக்கமுடியாது என்று அமெரிக்க யுத்த மந்திரி, மிஸ்டர் ஸ்டிம்சன் அமெரிக்க ராணுவப் பள்ளிக்கூடத்தில் பேசியபோது கூறினார்.

4. கிரீசும், இத்தாலியும்.

கிரீசின் தலை நகரான ஆதன்ஸ் பிரதேசத்தில் வேலை செய்யும் கிரேக்கத் தொழிலாளிகள், ஜெர்மானியர்களால் மிகக் கொடூரமாக நடத்தப்படுகிறார்கள் என்று எகிப்திலுள்ள கிரேக்கர்களுக்குச் செய்தி எட்டியிருக்கிறது. ஜெர்மன் வெடிகுண்டு பண்டகசாலைகளை அழிப்பதற்காக முயற்சி செய்தார்கள் என்ற குற்றச்சாட்டின்மேல் அநேக கிரேக்கத் தொழிலாளர்கள் கொலை செய்யப்பட்டார்களாம்.

கிரீஸ் தேசமும், அதன் தலை நகராகிய ஆதன்சும், இத்தாலியால் தன்னுடைய சொந்த நாடாகவே எடுத்துக்கொள்ளப்படும் என்று முசலோனி ஜூன்மீ 10வ கூறியிருக்கிறார். இத்தாலி யுத்தத்தில் ஈடுபட்ட முதல் வருஷக்கொண்டாட்டத்தில் பேசியபோது, அவர் இந்தச் செய்தியைத் தெரிவித்தார்.

5. பால்கன்ஸ், துருக்கி, இராக் முதலியன.

சென்ற ஞாயற்றுக்கிழமை (ஜூலைமீ 8வ) சுதந்தர பிரெஞ்சுத் துருப்புகளும், பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்துருப்புகளும் சிரியாவில் பிரவேசித்தன. ஜெர்மானியர்கள் சிரியாவைக் கைப்பற்றுவதற்குள், நேசத் துருப்புகள் சிரியாவில் பிரவேசித்தது மிகவும் முக்கியமான சம்பவம். ஜெனரல் டிகாலின் (சுதந்தர பிரெஞ்சு துருப்புகளின் தலைவர்) சார்பாக, ஜெனரல் காத்ரோ, சிரியா, லெபானன், என்ற இரு பிரதேசங்களின் சுதந்தரத்தைப் பாதுகாப்பதாக ஒரு அறிக்கை விட்டிருக்கிறார். பிரிட்டிஷ் அரசாங்கம் இந்த உறுதிமொழியைத் தானும் வற்புறுத்திக்கூறியிருக்கிறது.

சிரியாவில் பிரிட்டன் பிரவேசித்தால், எகிப்துக்கு இருந்த கெடுதி நீங்கி விட்டதென்றும், கெய்ரோவில் (எகிப்தின் தலை நகரம்) பொது மக்கள் மகிழ்ச்சியுடன் இருக்கின்றார்கள். மத்திய கிழக்கரங்கத்திலுள்ள அராபிய நாடுகளின் சுதந்தரமும், பெருமையும், பிரிட்டனின் செய்கையினால் காக்கப்பட்டன என்று கூறப்படுகிறது.

பிரிட்டிஷ் துருப்புகள் அதிகமான கஷ்டமில்லாமல் சிரியாவில் முன்னேறிச் செல்லுகின்றனவென்றும், டமாஸ்கஸ் தலை நகரத்துக்கருகில் சென்றிருக்கின்றனவென்றும் தெரிகிறது.

6. கப்பல் நிலைமை.

பிரிட்டிஷ் கப்பல், "மார்கொனி," ஜெர்மன் விமானங்களாலும், சப்மரீன்களாலும் தாக்கப்பட்டு, கிரீன்லாந்துக்கு 270 மைல் தென் கிழக்கில் முழுகடிக்கப்பட்டது. இது 7,402 டன் எடையுள்ளது; "கான்வாய்" துணைகப்பல்களில் ஒன்றாயிருந்தது. இதில் வேலை செய்த 59 கப்பற்காரர்கள் ஒரு அமெரிக்கக்கப்பலால் தப்புவிக்கப்பட்டார்கள்.

அட்லாண்டிக்கடலில், இரண்டு ஜெர்மன் 'சப்ளை' கப்பல்கள் பிரிட்டிஷ் கப்பல்களால் தாக்கப்பட்டு முழுகடிக்கப்பட்டன. இதற்கு முன், சென்ற வாரம், மூன்று 'சப்ளை' கப்பல்களும், ஒரு யுத்த முஸ்தீப்புடைய கப்பலும், பிரிட்டிஷ் கப்பல்களால் முழுகடிக்கப்பட்டன.

"நார்மண்டி" என்ற பிரெஞ்சுக்கப்பலைக் கைப்பற்றும்படி பிரசிடெண்ட் ரூஸ்வெல்ட் உத்தரவிட்டிருக்கிறார்.

ஹாலந்து கரையோரத்தில், பிரிட்டிஷ் ஆகாய விமானங்கள் எதிரிகளின் "கான்வாய்" துணைக் கப்பல்களைத்தாக்கின. 5,000 டன் எடையுள்ள இரண்டு பெருங்கப்பல்கள் வெடிகுண்டுகளால் தாக்கப்பட்டு, நெருப்பு பற்றி எரிந்துபோயின.

சென்ற மூன்று மாதங்களில், சராசரி ஒரு நாளைக்கு ஒரு எதிரி கப்பல் முழுகடிக்கப்பட்டது என்று லண்டனில் அறிவிக்கப்படுகிறது. மொத்தம் 83 கப்பல்கள் முழுகடிக்கப்பட்டன; 72 பழுதாக்கப்பட்டன; இந்த 72-ல், 18 கப்பல்கள் பிரயோசனப்படாத விதமாக சேதம் செய்யப்பட்டன.

7. தூரக்கிழக்கரங்கம்.

மார்ஷல் சியாங்கே ஷேக் (சீனாவின் தலைவர்) தலைமையின் கீழிருந்த இரண்டு சீனப்பட்டாளங்களும், வேறு 23 சிறு படைகளும், தெற்கு ஷான்சி பிரதேசத்திலும், வடக்கு ஹானன் பிரதேசத்திலும் நடந்த சண்டையில் அழிக்கப்பட்டதாக ஜப்பானியர்கள் கூறுகிறார்கள்.

சுங்கிங் என்ற சீனப்பட்டணத்தின்மேல் ஜப்பானிய விமானங்கள் வெடி குண்டுகளைப்போட்டு பலத்த சேதத்தை உண்டாக்கின. அநேக கடைகளும், வீடுகளும் நாசமாக்கப்பட்டன. விமானத்தாக்குதலுக்குப் பயந்து பூமிக்கடியிலிருக்கும் ஒரு சுரங்கப்பிரதேசத்தில் அநேகர் ஒளிந்துகொண்டார்கள். அதில் காற்றில்லாமல் திக்குமுக்காடி 700 பேர் ஆண், பெண், குழந்தைகளுட்பட இறந்துபோனார்கள்.

ஜப்பானிய அயல்நாட்டு மந்திரியான மிஸ்டர் மத்சுகாவை, பிரிட்டிஷ், விஷி, ஜெர்மன் ஸ்தானிகர்

கள் மூவரும் தனித்தனியாகக் கண்டு பேசினார்கள். பிரிட்டிஷ் ஸ்தானிகர், சார் ராபர்ட் கிரெசி, மிஸ்டர் மத்சூவிடம் 50 நிமிஷம் பேசினார்.

புதிய உலகத் திட்டத்தில் சேரும்படி ஜப்பான் அழைத்ததற்கு, டச்சு கிழக்கிந்திய தீவுகள் மறுத்து விட்டன. நேர் முகமாகவாவது, மறைமுகமாகவாவது, ஜெர்மனிக்கு எந்த சாமானகளும் அனுப்ப முடியாதென்று ஹாலந்து அரசாங்கப்பிரதிநிதிகள் கூறிவிட்டார்கள்.

8. விஷி.

சிரியாவில் பிரிட்டிஷ் துருப்புகள் பிரவேசித்ததைப் பற்றி விஷி அரசாங்கம் ஆட்சேபனை செய்திருக்கிறது. மாட்ரிட்டில் (ஸ்பெயினின் தலைநகரம்) இருக்கும் விஷி அரசாங்கத்தின் ஸ்தானீகர், அங்குள்ள பிரிட்டிஷ ஸ்தானீகராகிய சர் சாமுவேல் ஹோருக்கு இந்த ஆட்சேபனையைத் தெரிவித்திருக்கிறார்.

விஷி அரசாங்கத்தின் ஆட்சேபனையைப்பற்றி லண்டனில் உத்தியோக வட்டாரங்கள் மகிழ்ச்சியைத் தெரிவிக்கின்றன. பிரெஞ்சு ஆதிக்கத்தின் கீழிருந்த சிரியாவில் பிரிட்டிஷ் துருப்புகள் பிரவேசித்ததைப் பற்றி, விஷி அரசாங்கம் ஆட்சேபனை மாத்திரம் செய்திருக்கிறதே ஒழிய, அதற்காகப் பிரிட்டன் மேல் போர்தொடுக்கவில்லை என்ற விஷயம் குறிப்பிடப் படுகின்றது.

வடக்காப்பிரிக்காவில் உள்ள பிரெஞ்சு பிரதேசங்களுக்கும், விஷி அரசாங்கத்துக்கும் பிளவு ஏற்பட்டிருக்கிறதென்று, விஷியே ஒரு வதந்தியைக் கிளப்பி விட்டிருப்பதாகத் தெரிகிறது. ஜெனரல் வீகானுக்கும், அவருடைய சகாக்களுக்கும் அபிப்பிராய பேதமிருப்பதாகவும், ஜெனரல் வீகான் இப்போது பிரிட்டிஷாருக்கு அனுகூலமாக இருப்பதாகவும், அவருடைய தலைமையில் இருக்கும் வடக்காப்பிரிக்க பிரதேசங்கள் பிரிட்டிஷாருக்கு அனுகூலமாக மாறுவதற்கு இடமிருக்கிறதென்றும், செய்யப்படும் பிரசாரத்திற்கு ஒரு காரணம் இருக்கிறது. பிரெஞ்சு வடக்காப்பிரிக்காவைப் பொறுத்த வரையிலாவது, பிரிட்டிஷ் பொருளாதார முற்றுகை எடுபடவேண்டும் என்பதுதான் உண்மையான நோக்கம். பொருளாதார முற்றுகை எடுபட்டால், வெளியிலிருந்து சாமான்கள் வருவதற்கு அனுமதிக்கப் படுமால், அந்தச்சாமான்களைத் தந்திரமாக பிரான்சுக்குக் கொண்டு போய் விடலாம் என்று விஷி யோசனை செய்திருக்கிறது போலத் தெரிகிறது. ஆனால் இந்தத் தந்திரங்களெல்லாம் பிரிட்டிஷ் அரசாங்கத்துக்கு நன்றாய்ப் புலப்பட்டிருக்கிறது.

அட்மிரல் தார்லன், ஜெர்மன் ஆதிக்கத்திலுள்ள பிரான்சின் தலைநகராகிய பாரிசுக்குத் திரும்பிப் போவதாகவும், மீண்டும் விஷி அரசாங்கத்தின் சார்பாக ஜெர்மன் பிரதிநிதிகளுடன் பேசப்போவதாகவும், ஒரு ஜினீவா பத்திரிகை செய்தி கூறுகிறது. பிரெஞ்சுத் துரோகி, லவல், விஷி அரசாங்க பிரெஞ்சு நாட்டில் பிரவேசித்திருப்பதாகவும், அவருடைய வரவைப்பற்றி பெரிதுமக்கள் பேசிக் கொள்ளுகிறார்களென்றும் தெரிகிறது.

அட்மிரல் தார்லனுடைய நடவடிக்கைகளை அமெரிக்கா ஆட்சேபிக்கிறதென்றும், அமெரிக்க ஸ்தானீகர், அட்மிரல் லீஹி, மார்ஷல் பீதானை எச்சரிக்கை செய்திருக்கிறாரென்றும், ஆப்பிரிக்காவிலுள்ள பிரெஞ்சு குடியேற்ற நாடுகள் ஜெர்மனியுடன் சேருவதாயிருந்தால், அமெரிக்கா அதை வாவேறுகாநென்று அவர் வற்புறுத்திக்கூறியது விஷி அரசாங்கத்துக்கு, சற்று அச்சத்தை உண்டுபண்ணியிருக்கிறதென்றும், "டெய்லி மெயில்" பத்திரிகைக்கு, மாட்ரிட்டிலிருந்து வந்த செய்தி கூறுகிறது.

சென்ற வாரம் விஷியில் நடந்த பிரெஞ்சு மந்திரிசபைக் கூட்டத்தில் ஆப்பிரிக்காவைப்பற்றிய சில பிரச்சினைகளைப்பற்றி கவனிக்கப்பட்டதாகத் தெரிகிறது.

9. ஜெர்மனியின் ஆதிக்கத்திலுள்ள நாடுகள்.

ஜெர்மனியின் ஆதிக்கத்திலுள்ள நாடுகளில், ஜெர்மானியர்கள் எவ்வளவு கொடூரமாய் நடந்துகொண்டு வருகிறார்களென்பதைப்பற்றிய செய்திகள் வந்து கொண்டே இருக்கின்றன.

ஹாலந்திலுள்ள லீடன் சர்வகலாசாலையில் ஒரு யூதர் ஆசிரியராக இருந்தார். அவர் ரோமர்களின் சட்டத்தில் மிகுந்த நிபுணத்துவம் பெற்றவர். ஜெர்மானியர்கள் அவரை வேலையிலிருந்து நீக்கிவிட்டார்கள். இதைக் குறித்து சர்வகலாசாலை தன்னுடைய ஆட்சேபத்தைத் தெரிவித்தது. இந்தக் குற்றத்துக்காக, லீடன் சர்வகலாசாலை ஜெர்மானியர்களால் மூடப்பட்டது!

ஹாலந்தில் பல பாகங்களில் ஜெர்மனிக்கு விரோதமாகக் கிளர்ச்சிகள் நடைபெற்று வருகின்றன. சமீபத்தில், ஆம்ஸ்டர்டாமிலுள்ள ஒரு பள்ளிக்கூடமும் இக்கிளர்ச்சியில் சேர்ந்துகொண்டது.

சென்ற மாதம் ஹாலந்தில், தினந்தோறும், சராசரி 450 பேருக்குமேல் நாஜிகளால் கொல்லப்பட்டிருக்கிறார்கள்!

குரோஷியாவிலுள்ள சாகரெப் என்ற பட்டணத்தில், சினிமா தொழில், அச்சடிக்கும் தொழில், நாடக சாலைகள், ரேடியோ நிலையங்கள், முதலியவைகளில் யூதர்கள் வேலை செய்யக்கூடாது என்று ஜெர்மானியர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள். கலைசம்பந்தமானதும், விளையாட்டு சம்பந்தமானதுமாகிய எந்த வேலையிலும் யூதர்கள் ஈடுபடக்கூடாது என்றும் உத்தரவிடப்பட்டிருக்கிறது. இந்த உத்தரவுகள் ஜெர்மன் ரேடியோ பேச்சு மூலம் அறிவிக்கப்பட்டன.

குரோஷியாவைக் காட்டிக்கொடுத்த குஸ்லிங் தலைவர், ஜெர்மனியின் ஆதிக்கத்திலுள்ள டேனிஷ் ரேடியோ மூலம் பேசும்போது குரோஷியாவிலுள்ள தொழிலாளிகளைப்பற்றிக் குறிப்பிட்டார். இதுவரைக்கும், 5,000 குரோஷியத் தொழிலாளர்கள் ஜெர்மனிக்கு அனுப்பப்பட்டிருக்கிறார்களென்றும், இன்னும் அநேக ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் அனுப்பப்படுவார்களென்றும் அவர் கூறினார்.

ஜெர்மனியில், 1941-ம் வருஷம் மார்ச் மீ 1,496 பேர் கைது செய்யப்பட்டார்கள். என்ன குற்றத்திற்காக? அயல் நாட்டு ரேடியோ செய்திகளைக் கேட்டதற்காக. ஒரு மனிதனுக்குக் கொலை தண்டனை விதிக்கப்பட்டது; அவன் அயல் நாட்டு ரேடியோ அறிக்கைகளை 'பட்டுவாடா' செய்தானாம்!

ஹங்கேரியின் முதல் மந்திரி, படோகி என்பவர், சென்றவாரம் இத்தாலியிலுள்ள பிளாரன்ஸ் நகருக்கு, ஒரு ஸ்பெஷல் ரயில் வண்டியில் சென்றிருந்தார். அவருடைய பிரயாணம் பொது விஷயங்களைப்பற்றியல்ல என்று கூறப்பட்டது. ஆனால், ரோம் ரேடியோ, ஹங்கேரியின் பார்லிமெண்டு ஜூன் மீ 11உ கூடும் என்று அறிவித்திருக்கிறது.

நார்வேயில், பொதுமக்கள் அமைதியில்லாமல் இருக்கிறார்கள். நார்வேயிலுள்ள தேசிய ஸ்தாபனங்களில் பிரபலமான 43 சங்கங்கள் ஒரு கூட்டுக்கடிதம் எழுதி, ஜெர்மன் கமிசார், தர்போவனுக்கு, அனுப்பியிருக்கின்றன. அதில் நார்வேயில் நடக்கும் அநியாயங்களில் சில குறிப்பிடப்பட்டிருக்கின்றன. பள்ளிக்கூடங்களிலும், கலாசாலைகளிலும், பொதுக் கூட்டங்களிலும் ஜெர்மனியர்களிடம் கூலி வாங்கி வயிறு வளர்க்கும் சில துரோகிகள் பண்ணும் அட்டகாசங்களுக்கும், கொடுமைகளுக்கும் அளவேயில்லை. ஆஸ்லோவுக் குகில் உள்ள டைக்பார்க் பைத்தியக்கார ஆஸ்பத்திரியின் தலைவர், டாக்டர் கெஸ்லிங் என்பவரை துராக்கிருதமாக சில காலிகள் எங்கேயோ தூக்கிக்கொண்டு போய்விட்டார்கள். நார்வேயின் துரோகியான குஸ்லிங் ஏற்படுத்திய நியாயாதிபதிகளும் போலீஸ்காரர்களும், அனுப்பும் உத்தரவுகள் நார்வேயின் சட்டத்திற்கும், சர்வதேசிய சட்டத்திற்கும் விரோதமானவை என்று அந்தக்கடிதத்தில் கையெழுத்திட்ட தலைவர்கள் கூறுகிறார்கள். தனிப்பட்ட முறையில் பழிக்குப்பழி வாங்கலாம் என்ற கொள்கையை குஸ்லிங் பொது வழக்கறிஞர் நிலைநிறுத்தியிருக்கிறார்; அதனால் நார்வே மக்களில் பலர் தாக்கப்படுகிறார்கள்; அதற்கும் சட்டபூர்வமான பரிகாரம் எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை.

அந்தக் கடிதம் இன்னும் இதர அநியாயங்களைக் குறிப்பிட்டிருக்கிறது. அரசாங்க உத்தியோகஸ்தர்களும் நகர சபை உத்தியோகஸ்தர்களும் 'நேஷனல் சாம்லிங்' என்ற குஸ்லிங் கட்சியை சேராவிட்டால் வேலையிலிருந்து நீக்கப்படுவார்கள் என்று பயமுறுத்தப்பட்டிருக்கிறார்கள். காலியான வேலைகளெல்லாம் குஸ்லிங் கட்சியைச் சேர்ந்தவர்கள் நிய

ஸிரியா பிரதேசப் படம்

அளவு 1 அங்குலம் = 80 மைல்கள்



Reg. No. 65/2 Copies 9700

Heliozinco., Survey Office, Madras. 1941.

மிக்கப்பட்டு வருகிறார்கள். வேலைக்கு அவசியம் வேண்டிய தொழிற்படிப்பு முதலிய யோக்கியதைகளை பற்றிக் கவனிப்பதே இல்லை. அப்படியிருந்தும், பர்ஜன் என்ற ஜில்லாவில், 4,000 உத்தியோகஸ்தர்களில் 12 பேர்தான் 'சாம்லிங்'-கில் சேர்ந்தார்கள்.

நார்வேயில் உள்ள டிராண்டுஹிம் என்ற கப்பற் பட்டணம், ஜெர்மனிய கடற்படைத் தளமாக மாற்றப் படப்போகிறது. அங்கிருந்த பண்டக சாலைகள், இதர கட்டடங்கள் இடித்துவிடப்பட்டன. அங்கு சப்மரீன்கள் தயார் செய்வதாக ஜெர்மனியிலிருந்து நூற்றுக்கணக்கான தொழிலாளர்கள் கொண்டு வரப்பட்டிருக்கிறார்கள்.

10. நடுநிலைமைநாடுகள்—ருஷ்யா, ஸ்பெயின் தாய்லாந்து.

ருஷ்யாவுக்கும், ஜெர்மனிக்கும் இருக்கும் தொடர்பு சற்று பாதிக்கப்பட்டிருப்பதாக ஸ்டாக்ஹோமில் (ஸ்வீடன்) கூறப்படுகிறது. ஜெர்மனி ஒரு விஷயத்தில் மகிழ்ச்சிகொண்டிருப்பதாகத் தெரிகிறது ; ருஷ்ய ரேடியோவில் ஜெர்மன பாஷையில் பேசப்படும் நிகழ்ச்சிகள் அதிகரிக்கப்பட்டிருக்கிறதாம் ; அதல்லாமல், ருஷ்ய ரேடியோவில் ஜெர்மனிக்கு விரோதமாகப் பிரசாரம் செய்யப்படவில்லையாம்.

மாஸ்கோவில் (ருஷ்யாவின் தலை நகரம்) உள்ள பிரிட்டிஷ் ஸ்தானீகர், சர் ஸ்டாபோர்டு கிரிப்ஸ், லண்டனுக்கு அழைக்கப்பட்டிருக்கிறார். லண்டனுக்குப் போவதென்றால், ஸ்வீடனிலிருந்து பிரிட்டன் வரைக்கும் ஜெர்மன் ஆதிக்கத்திலுள்ள நாடுகளின் மேல் தானே விமான மூலமாகச் செல்லவேண்டும் என்று ஜெர்மன் பத்திரிகைகள் கேட்கின்றன.

ஸ்பெயின், மாஞ்சுகுவோக்கு (சீனா) ஒரு பிரதிநிதியை நியமித்திருக்கிறது. டோக்யோவிலுள்ள (ஜப்பானின் தலை நகரம்) ஸ்பெயினின் ஸ்தானீகரை, மாஞ்சுகுவோவுக்கும ஸ்தானீகராக இருக்கும்படி உத்தரவிட்டிருக்கிறது.

ஸ்பெயின் இரானுடன் ஸ்தானபத்தியத் தொடர்பை புதுப்பித்துக்கொண்டது.

ஸ்பெயினின் சர்வாதிகாரி, ஜெனரல் பிராங்கோவுக்கு, விஷி அரசாங்கத்தின் முதல் மந்திரி, மார்ஷல் பீத்தான், ஒரு செய்தி அனுப்பியிருப்பதாக கார்டினல் ஜெர்மையர் கூறுகிறார். ஸ்பெயினின் தலை நகரமான மாட்ரிட்டில் புதிதாகக் கட்டப்பட்ட டமைய மாதாகோவிலுக்குத் திறப்பு விழா செய்வதற்காகத் தான் போவதாகவும், அப்போது ஜெனரல் பிராங்கோவைக்கண்டு, மார்ஷல் பீத்தான் அனுப்பிய ரகசியச் செய்தியை அவருக்குச் சொல்லப்போவதாகவும் கார்டினல் ஜெர்மையர் அறிவித்தார்.

தாய்லாந்து நடுநிலைமை வகிப்பதைப்பற்றி அதன் முதல் மந்திரி சோங்கிராம் தாய்லாந்து சட்டசபையின் விசேஷக் கூட்டத்தில் பேசியபோது குறிப்பிட்டார். "ஜப்பான் யுத்தத்தில் பிரவேசித்தாலும் தாய்லாந்து நடுநிலைமை நாடாகத்தான் இருக்கும். அந்த முறையில்தான் எல்லா நாடுகளுடன் வியாபார சம்பந்தம் வைத்துக்கொள்ளும்" என்று அவர் கூறினார். ஜப்பானுக்குத் தாய்லாந்து கொடுத்த உறுதிமொழியை வற்புறுத்தி இப்போதிருக்கும் பரஸ்பர எதிர்ப்பில்லா உடன்படிக்கையைத் தவிர வேறு யாதொரு உடன்படிக்கையும் செய்யப்போவதில்லை என்று தெரிவித்தார்.

அயர்லாந்தின் தலைநகரமாகிய டப்ளினின்மேல் ஜெர்மன் விமானங்கள் வெடிகுண்டு போட்டதைக் குறித்து அயர்லாந்தின் சர்வாதிகாரி மிஸ்டர் டிவெலரா ஜெர்மனியிடம் தன்னுடைய ஆக்ஷேபனையைத் தெரிவித்திருக்கிறார். அயர்லாந்தின் ஆக்ஷேபனை தனக்குக் கிடைத்ததென்றும் வேண்டுமென்றே வெடி குண்டுகள் போடப்படவில்லை என்றும், அதை பற்றி விசாரணை நடத்தப்படுகிறதென்றும், ஜெர்மனி கூறுகிறது.

சென்ற செவ்வாய்க்கிழமை வெளியிடப்பட்ட ஒரு அறிக்கையில் ஒரு ஜெர்மன் விமானம் அயர்லாந்தில் சர்ச் டௌன் என்ற இடத்துக்கருகில் விழுந்து நெருப்புக்கிரையாய்விட்டது என்று டப்ளின் சமாச்சார ஸ்தாபனம் கூறுகிறது. ஜெர்மன் விமானத்திலிருந்த ஐந்து ஜெர்மன் விமானிகள் உயிரிழந்தார்கள். ஒரு பிரிட்டிஷ் விமானம் பறக்கமுடியாமல் கிலோமாக்தாமஸ் என்ற இடத்தில் இறங்கியது. அதிலிருந்த ஒரே விமான ஓட்டி காவலில் வைக்கப்பட்டார்.

ஜெர்மனியின் யுத்த மெஷின்களை யெல்லாம் சிதைக்கும் பிரிட்டிஷ் வெடி விமானங்கள்.

நாள் தோறும் ஜெர்மனிமீது பறந்து யுத்த தளவாடங்கள் செய்யும் தொழிற்சாலைகள்மீதும் ராணுவ முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள்மீதும் வெடி குண்டுகளைப் பொழிந்து அவைகளை அழிக்கும் பிரிட்டிஷ் பெரிய வெடி விமானங்களில் வெடி மருந்தைத் திணிக்கும் காட்சி.

நெருங்கிய கிழக்கரங்கத்தில் யுத்தம்

சிரியாவில் பிரிட்டிஷார் பிரவேசம்.

விஷி அரசாங்கத்தின் சூழ்ச்சியின் வீழ்ச்சி.

[சிரியாவில் ஒரு முக்கியமான போர் நடந்து கொண்டு வருகிறது. யுத்தத்தின் முடிவை நிச்சயப்படுத்தும் அம்சங்களில் சிரியா ஒன்ருகும். சிரியாவை அச்சு அரசுகள் கைப்பற்றியிருந்தால், மத்தியதரைக்கடலிலும், மத்தியக் கிழக்கரங்கத்திலும் இருக்கும் நேசதேசத்தார்களின் நிலைமைக்குத் தீங்கு நேரலாம். ஆனால், மத்தியதரைக் கடலில், பிரிட்டிஷ் கடற்படைதான் ஆளுகிறது. கடற்படைப்பலம் இல்லாதவரைக்கும், ஜெர்மனி சிரியாவில் ஒன்றும் செய்யமுடியாது. சிரியா பிரிட்டிஷார் கையிலிருந்தால், நெருங்கிய கிழக்கரங்கத்தில் கடற்படையின் பலத்தோடு தரைப்படைகளின் பலமும் ஒன்று சேரும். இப்போது, பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத் துருப்புகளும், சுதந்தர பிரெஞ்சுத்துருப்புகளும், லெப்டினெண்ட்-ஜெனரல் சர் ஹென்றி வில்சனின தலைமையின்கீழ், சிரியாவில் பிரவேசித்திருக்கின்றன. சிரியாவைப்பற்றிய சில குறிப்புகள் இந்தக் கட்டுரையில் தரப்படுகின்றன.]

நெருங்கிய கிழக்கரங்க பூகோளப் படத்தைப்பார்த்தால், சிரியா, ஜெர்மனி கிழக்குநோக்கிப் போகும் பாதைக்கு வலது பக்கத்தில் இருக்கிறது புலப்படும். கிழக்கு மத்தியதரைக் கடலோரத்திலும், பாலஸ்தீனத்திற்கு வடக்கிலும், சிரியா இருக்கிறது; அதனுடைய விஸ்தீரணம் 58,000 சதுர மைல்கள்; ஜனத்தொகை 34 லட்சம்: மக்களில் அராபி பாஷை பேசுபவர்களே அதிகம். துருக்கி ஏகாதிபத்தியத்தில் சிரியா ஒரு நாடாக இருந்தது. 1920–21-ல் ஏற்பட்ட சமாதான உடன்படிக்கைகளின் கீழ், துருக்கி ஏகாதிபத்தியம் ஒன்பது நாடுகளாகப் பிரிக்கப்பட்டது. அவையாவன:—துருக்கி, சாடி அரேபியா, ஏமன், இராக், எகிப்து, டிரான்ஸ் ஜார்டன், பாலஸ்தீனம், சிரியா, லெபானன் இவைகளில் சிரியாவும், லெபானனும், சர்வதேச சங்கத்தில் பிரெஞ்சு ஆதிக்கத்தின்கீழ் விடப்பட்டன. பிரெஞ்சு ஆதிக்கத்தில்; சிரியா பிரதேசம் நான்கு நாடுகளாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது:—

(1) சிரியா மாத்திரம் (விஸ்தீரணம் 49,000 சதுர மைல்கள்; ஜனத்தொகை 20 லட்சம்; தலை நகரம் டாமஸ்கஸ்).

(2) லெபானன் (3,800 சதுர மைல் விஸ்தீரணம்; கிறிஸ்தவர்களும், அராபியர்களுமடங்கிய ஜனத்தொகை 7 லட்சம்; தலை நகரம் பீரட்; சிரியா பிரதேசத்து பிரெஞ்சு அரசாங்கத் தலைநகரமும் இதுவே.)

(3) லடாகியா (2,800 சதுர மைல் விஸ்தீரணம்; ஆலெனைட் மக்களடங்கிய ஜனத்தொகை 3 லட்சத்து 50 ஆயிரம்.)

(4) ஜெபல்துரூஸ் (2,400 சதுர மைல் விஸ்தீரணம்; ஜனத்தொகை 50,000; போர் குணமிள்ள முஸ்லீம்கள் இங்கு மிக அதிகம்).

இந்த நான்கு நாடுகளும் ஒன்றுக்கொன்று அரசியல் தொடர்பு இல்லாமல் இருக்கின்றன.

சிரியாவில் உள்ள அராபியர்கள் சுதந்தரத்தை விரும்புபவர்கள். தங்களுக்குப் பக்கத்திலிருக்கும் இராக்குக்கு, பிரிட்டன் சுதந்தரத்தை அளித்ததைக் கண்டு இந்த சுதந்தர தாகம் அதிகப்பட்டது. பிரெஞ்சு ஆதிக்கத்தின்கீழ் இருக்க அவர்கள் விரும்பவில்லை. 1925–26-ல சிரியாவில் பொதுமக்கள் புரட்சி செய்தார்கள். அதற்குப் பிறகும் வெகு காலமாக நாட்டில் அமைதியின்மை இருந்து வந்தது. 1936-ம் ஞு லியான்புளூமை முதல் மந்திரியாகக்கொண்டு பிரெஞ்சு அரசாங்கம் சிரியாவுடனும் லெபானனுடனும், ஒப்பந்தங்கள் செய்துகொண்டது. அதன்படி, ஒப்பந்தத்தை பிரெஞ்சு பார்லிமெண்டு ஒப்புக்கொண்டதும், மூன்று வருஷம் கழித்து, அதாவது 1940-ம் ஞு பூரண சுதந்தரம் கொடுக்கப்படும். ஆனால் ஒப்பந்தங்களை பிரெஞ்சு பார்லிமெண்டு ஒப்புக்கொள்வதற்குக் காலதாமதம் ஆயிற்று. சிரியாவில் கலகங்கள் உண்டாயின. 1939-ம் ஞு பிரான்சுக்கு விரோதமாக புரட்சி ஆர்ப்பாட்டங்கள் செய்யப்பட்டன. பிரெஞ்சு அரசாங்கம் ஒப்பந்தங்களை மறுத்துவிட்டது. சிரியாவில் பெருத்த கலகங்கள் ஏற்பட்டன. 1939-ம் ஞு ஜூலை மீ பிரான்சின் ஹை கமிஷனர், கேபிரியல் பூவா, சிரியாவின் அரசியல் திட்டத்தை தற்காலிகமாக நிறுத்திவிட்டு, பிரான்சு தானே அரசாங்கத்தை நடத்தப்போகிறது என்று அறிவித்தார்.

சிரியாவில் குழப்பம்.

பின்னர் இந்த மாபெரும் யுத்தம் வந்தது; பிரான்சு தேசமே வீழ்ச்சியடைந்தது. இதனால் சிரியாவில் குழப்பம் ஏற்பட்டது. மார்ஷல் பீத்தானுடைய அரசாங்கத்தைச் சிலர் ஆதரித்தார்கள்; சிலர் ஜெர்மனிக்கும், பீத்தான் அரசாங்கத்துக்கும் விரோதமான ஜெனரல் டிகாலே ஆதரித்தார்கள். சில பிரெஞ்சு தளகர்த்தர்களும், துருப்புகளும் பாலஸ்தீனத்துக்கு ஓடிப்போய், பிரிட்டிஷாருடன் சேர்ந்து கொண்டார்கள். அநேக சிரியா நாட்டு மக்களும் பிரிட்டிஷ் பட்டாளங்களில் சேருவதற்காக, பாலஸ்தீனுக்கு ஓடிவிட்டார்கள்.

விஷி அரசாங்கம் ஜெர்மனிக்குச் சாதகமாகவும், நேச தேசத்தார்களுக்குப் பாதகமாகவும், நடந்து வருகிறது. ஜெர்மனியினுடைய கட்டாயத்தின் மேல், பிரான்சு சர்வதேச சங்கத்திலிருந்து விலகியது. ஜெர்மனியினுடைய பயமுறுத்தலின் மேல், சிரியா மூலமாக ஜெர்மன் விமானங்கள் செல்லுவதற்கு விஷி இடம் கொடுத்தது. சட்டப்படி பார்த்தாலும் சரி, சாதாரண நீதியாய்ப் பார்த்தாலும் சரி, சிரியாவை ஜெர்மனியின் சக்கரத்தில் கட்ட முயற்சித்தது மிகவும் அநியாயம். அம்மாதிரி செய்வதற்கு விஷி அரசாங்கத்துக்கு யாதொரு உரிமையும் கிடையாது. இதல்லாமல், ஏராளமான ஜெர்மானியர்கள், சிப்பாய்கள், ஆகாய விமானிகள், சிரியாவில்வந்து தங்கியிருக்கிறார்கள். முழுப்பூசனிக்காயை சோற்றில் மறைக்க முயற்சித்ததுபோல, இந்த உண்மையான விஷயத்தை விஷி மறுத்துவிட்டது.

சென்றவாரம், ஜூன் மீ 9உ, முன் ஜாக்கிரதையாகவும், சிரியா ஜெர்மனிக்கு அடிமையாகாமலிருப்பதற்காகவும், பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்துருப்புகளும், சுதந்தர பிரெஞ்சு துருப்புகளும் சிரியாவிலும், லெபானனிலும், பிரவேசித்தன. சுதந்திர பிரெஞ்சு தளகர்த்தர் காத்ரோ, அந்த நாடுகளின் சுதந்தரத்தைப் பாதுகாக்கப் போவதாயும், அதற்காகவேண்டிய ஒப்பந்தங்களைச் செய்வதற்குத் தயாராயிருப்பதாகவும் வாக்குறுதியளித்தார். அவருடைய உறுதிமொழியோடு தங்களையும் சேர்த்துக் கொள்வதாக பிரிட்டிஷ் அரசாங்கத்தார் அறிவித்திருக்கிறார்கள்; தங்களுடைய கொள்கையை விளக்கி ஒரு அறிக்கை பிரசுரித்திருக்கிறார்கள். சுதந்தர பிரெஞ்சு துருப்புகளும், பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத் துருப்புகளும், சிரியாவில் பிரவேசித்தது சிரியாவின் சுதந்தரத்தைக் கைப்பற்றுவதற்கல்ல; அதைக்காப்பாற்றுவதற்காகத்தான். சிரியாவிலிருந்து ஜெர்மன் துருப்புகளைத்துரத்திவிட்டு, சிரியாவை பிரிட்டனுக்கு விரோதமாக உபயோகப்படுத்தாமலிருப்பதற்காக வேண்டிய முயற்சிகளைச்செய்வதுதான் தம்முடைய நோக்கமென்று பிரிட்டிஷ் அரசாங்கமும், ஜெனரல் காத்ரோவும் விளக்கிக்கூறியிருக்கிறார்கள்.

இதர நெருங்கிய கிழக்கரங்க நாடுகள்.

டிரான்ஸ் ஜார்டன் என்பது பாலஸ்தீனம், இராக், சிரியா, அரேபியா இவைகளால் சூழப்பட்ட மத்தியிலுள்ள நாடு. இதில் காபா என்ற முக்கியமான துறைமுகம் இருக்கிறது. சூயஸ் கால்வாய்க்குப் போவதற்கு தரை வழியாகவும், கடல் வழியாகவும் போவதற்கு இது ஒரு வழி. கொள்ளைக்கூட்டத்தினரால் சூறையடிக்கப்படாமல், டிரான்ஸ் ஜார்டனைப் பிரிட்டன் பாதுகாத்து வந்தது. அதன் அரசரான எமீர் அப்துல்லா இந்த யுத்தத்தில் பிரிட்டனுக்கு ஆதரவாக இருக்கிறார்; சமீபத்தில் இராக்கின் சட்டபூர்வமான அரசாங்கத் தலைவருக்கு. ரஷீத் அலிக்கு விரோதமாக, டிரான்ஸ் ஜார்டனில் இடம் கொடுத்தார்.

பாலஸ்தீன் 1917-ம் வருஷம் ஜெனரல் அலென்பியால் ஜெயிக்கப்பட்டது. சர்வதேச சங்கத்தின் உத்தரவின் படி, பிரிட்டன் பாலஸ்தீனத்தின் அரசாட்சியை நடத்தி வருகிறது. அராபியர்களுக்கும், யூதர்களுக்கும் இங்கு எப்போதும் சண்டையும் சச்சரவு மாயிருக்கும். 1939-ம் வருஷம் மேமீ 17உ வெளியிடப்பட்ட பிரிட்டிஷ் அறிக்கையில், பாலஸ்தீனம் ஒரு சுதந்தர நாடாக ஏற்படுத்தப்படுமென்றும், அதன் அரசாங்கத்தில் அராபியர்களும், யூதர்களும் தங்களுக்குண்டான பங்கெடுத்துக்கொள்வார்களென்றும், பிரிட்டன் வாக்குறுதி அளித்திருக்கிறது. பாலஸ்தீன சுதந்தர அரசாங்கம் பத்து வருஷம் கழித்து நிர்மாணிக்கப்படும். இப்போது இந்த யுத்தம் நடுவில் வந்து சேர்ந்தது. பழைய சண்டைகள் மறைந்தன; அராபியர்களும், யூதர்களும் பிரிட்டனை ஆதரிக்கிறார்கள்.

மிஸ்டர் சர்ச்சிலின் பார்லிமெண்டு பேச்சு.

கிரீட், சிரியா, அட்லாண்டிக் யுத்த நிலை.

ஆறு மாதங்களில் வெற்றி காணலாம்.

சென்ற செவ்வாய்க்கிழமை, காமன்ஸ் சபையில், பிரிட்டிஷ் முதல் மந்திரி, மிஸ்டர் சர்ச்சில், மற்றொரு அருமையான பிரசங்கம் செய்தார். கிரீட் யுத்தத்தைப்பற்றிக் குறை கூறியவர்களுக்கு அதில் பதிலளித்தார்; மத்திய கிழக்கரங்கத்தில் ஆகாய விமான பலமும், இதர படைகளின் பலமும் அதிகரித்துக்கொண்டு வருகின்றன என்ற நற்செய்தியைக் கூறினார். அவருடைய பிரசங்கத்தைப் பார்லிமெண்டு அங்கத்தினர்கள் கவனத்தோடும், சாந்தத்தோடும் கேட்டார்கள். சாவதானமாகவும், வெற்றியில் பூரண நம்பிக்கையுடனும், மிஸ்டர் சர்ச்சில் பேசினார். அவருடைய பிரசங்கத்தின் முக்கியமான சில பாகங்கள் இங்கு பிரசுரிக்கப்படுகின்றன:—

"மத்தியக் கிழக்கரங்கத்துக்கு இடைவிடாது பல வழிகள் மூலமாக யுத்த தளவாடங்கள் அனுப்பிக் கொண்டே இருக்கிறோம். மத்தியக் கிழக்கு அரங்கத்தில் எவ்வளவு பெரிய ஆகாய விமானப் படையை ஏற்படுத்த முடியுமோ, அவ்வளவு பெரிய படைக்காக எல்லாவித முயற்சிகளையும் செய்து கொண்டு வருகிறோம்.

"கிரீட் யுத்தத்தின் பளுவு, அதிகமாக ஆஸ்திரேலியத் துருப்புகள் மேலும், நியூஜிலாந்து துருப்புகள் மேலும் விழுந்தது வருந்தத்தக்கது. பிரிட்டிஷ் படைகளில், உயிரிழந்தவர்கள், காயமடைந்தவர்கள், காணமற்போனவர்கள் எல்லாம் 15,000 பேர் என்று கணக்கிடப்பட்டிருக்கிறது. இந்தக்கணக்கில் கிரேக்கர்களும், கிரீட்டியர்களும் சேர்க்கப்படவில்லை. ஜெர்மானியர்களுடைய நஷ்டம் பின்வருமாறு:—கடலில் முழுகியிறந்தவர்கள் 5,000; உயிரிழந்தவர்களும், காயப்பட்டவர்களும் 12,000. 180 வெடிகுண்டு விமானங்களையும், துருப்புகளைக் கொண்டுசெல்லும் விமானங்கள் 250-ஐயும் ஜெர்மானியர்கள் இழந்தார்கள்.

விமான பாதுகாப்பு பலம்.

"கிரீட்டிலிருந்து பிரிட்டிஷ் விமானப்படை பின் வாங்கிச் செல்லவேண்டும் என்று கிரீட் படைகளின் பிரதம தளகர்த்தர் ஜெனரல் பிரேபர்க் அபிப்பிராயப்பட்டார். இந்த அபிப்பிராயத்தை மத்திய கிழக்கரங்கத்து விமானப் படைத்தலைவர் ஒப்புக்கொண்டு விமான படையைப் பின் செல்லும்படி உத்தரவிட்டார். கப்பற் படையின் துணைப்படையான விமானப்படையும் இந்த அபிப்பிராயத்தை ஆமோதித்தது. கிரீட் யுத்தத்தின் படிப்பினை, ஆகாய விமானச் சாலைகளின் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருக்கிறது; பிரிட்டிஷ் படைகள் ஒரு இடத்திலிருந்து வேறொரு இடத்துக்கு விரைவாகப் போவதற்கு வேண்டிய சௌகரியங்கள் செய்ய பட்டிருக்கின்றன. இதில் யாதொரு சிக்கனமும் செய்யப்போவதில்லை; ஒரு வினாடியும் காலதாமதமாகாது.

"சிரியாவில் பிரிட்டிஷ் துருப்புகள் முன்னேறிச் சென்றுகொண்டிருக்கின்றன. சிரியாவையாவது, இதர பிரெஞ்சு குடியேற்ற நாடுகளையாவது, பிரிட்டன் கைப்பற்றவேண்டுமென்ற எண்ணம் கிடையாது. இந்த யுத்தத்தில், பிரிட்டன் குடியேற்ற நாடுகளையாவது, அல்லது அதுபோன்ற இதர சௌகரியங்களையாவது நாடவில்லை. சிரியா யுத்தம், எகிப்தை நன்றாகப் பாதுகாத்த பின்பே ஆரம்பிக்கப்பட்டது. சிரியாவில் முன்னேறிச் செல்வதற்குத் தயாராயிருப்பதாக ஜெனரல் வேவல் கூறியபோது நான் மிகவும் சந்தோஷப்பட்டேன்.

"மிஸ்டர் ஹோர்-பெலிஷா சமீபத்தில் செய்த பிரசங்கத்தில், பிரிட்டிஷ் தொழிற்சாலைகளின் உற்பத்தி பயப்படும்படியாகக் குறைந்துகொண்டு வருகிறதென்றுகூறியிருக்கிறார். ஆனால் அது சரியல்ல. விமானத்தாக்குதல்களினால், உற்பத்தி குறையவில்லை; அதிகரித்துக் கொண்டுதான் வருகிறது. பீரங்கிகளும், டாங்கிகளும் அதிகமாக உற்பத்தி செய்யப்படுகின்றன. 1941-ம் வருஷம் முதல் மூன்று மாசங்களில், அதற்கு முன் மூன்று மாதங்களைவிட, 100-க்கு 50 அதிகமான பீரங்கிகளும், டாங்கிகளும் செய்யப்பட்டிருக்கின்றன.

ஒரு பிரபல அத்தியாயம்.

"அட்லாண்டிக் யுத்தம் நம்மால் சரியாக நடத்தப்பட்டு வருகிறது; சென்ற மேமீ இந்த யுத்தத்தில் மிக நல்ல மாதம். மே மாதத்தில் ஜெர்மானியர்களுக்கு அதிக கப்பல்கள் நஷ்டமாயின. பிரிட்டிஷ் கப்பல் நஷ்டத்தில், ஜெர்மன் நஷ்டம் முக்கால் பாகம்.

"பிரிட்டன் இப்போது தனித்து நின்று, ஜெர்மனியோடும், இடாலியோடும் போர்புரிந்து வருகிறது. விஷி துரோக சிந்தனையுடன் நடக்கிறது. ஆனால் அடுத்த ஆறு மாதம் வரைக்கும் இப்போதிருக்கிற நிலைமை தொடர்ந்து இருந்தால், பிரிட்டன் வெற்றியடையும்; பிரிட்டிஷ் யுத்த சரித்திரத்திலும், ஏகாதிபத்திய யுத்த சரித்திரத்திலும், பெருமைப் படத்தக்க ஒரு பிரபல அத்தியாயம் எழுதப்படும்.

கிரீட்யுத்தம்: லாப நஷ்டம்.

தரைப்படைக்கு விமானபலம் அவசியம்.

1940–41-ல் யுத்தப்போக்கின் சுருக்கம்.

[கிழக்கு மத்திய தரைக்கடலின் கேந்திர ஸ்தானம் கிரீட் என்ற தீவு. இதனுடைய முக்கியத்தைப்பற்றி 11-வது இதழில் விளக்கிக்காட்டப்பட்டது. கிரீட்டை நேசநாடுகள் இழந்துவிட்டன. இதைக்குறித்து, பிரிட்டனிலும், ஆஸ்திரேலியாவிலும், நியூஜிலாந்திலும் பலத்த வாதம் நடைபெற்று வருகிறது. இந்த நாடுகள் குடியரசுநாடுகளாதலால், எல்லா விஷயங்களும் பகிரங்கமாக வாதிக்கப்படுகின்றன. கிரீட்யுத்தத்தில் பெற்ற தோல்வியைக்குறித்து, பகிரங்கமாக ஆலோசனை செய்வது ஒரு நல்ல காரியம்தான். இந்தக்கட்டுரையில் இந்த வாதத்தைப்பற்றியும், கிரீட் யுத்தத்தின் படிப்பினைகளைப்பற்றியும், கூறப்படுகிறது.]

கிரீட்டை இழந்ததால், நேசநாடுகளுக்குச் சில நஷ்டங்கள் உண்டாயிருக்கின்றன. நேசநாடுகள் முன்னேறிச் செல்வதற்கு வேண்டிய கப்பற் படைத் தளங்களும், ஆகாய விமானத்தளங்களும், கிரீட்டில் இருந்தன; கிரீட்டை இழந்ததால், இந்தத்தளங்களும் இழக்கப்பட்டன. இது மாத்திரமல்லாமல் வேறொரு நஷ்டமும் உண்டாயிருக்கிறது, என்று லண்டன் "டைம்ஸ்" பத்திரிகை கூறுகிறது. அதாவது மேற்கு மத்தியதரைக்கடலுக்கும், எகிப்துக்கும், மத்தியில் இரண்டாவது குறுகிய வழி ஏற்படுத்தப்பட்டிருக்கிறது என்பதே; இதனால், பிரிட்டிஷ் கப்பற் படையின்மேல், எதிரிகள் ஆகாய விமானங்களிலிருந்து தாக்குவதற்குச் சௌகரியம் உண்டாயிருக்கிறது. ஆனால், கிரீட் தீவுக்கும், வடக்காப்பிரிக்காவில் அதற்கு நெருங்கிய பிரதேசமாகிய

சிரிநெய்காவுக்கும், 200 மைல் தூரம்தான்; இதற்கு அடுத்தாற்போல் இருக்கும் எகிப்தில் இருந்து பிரிட்டிஷ் ஆகாய விமானப்படை வேலை செய்யலாம். இருந்தபோதிலும், கிரீட் யுத்தத்தில், நேசதேசப் படைகளுக்குச் சரியான ஆகாய விமானபலம் கிடைக்கவில்லை என்பது ஒரு பெரிய குறை. கிரீட்டுக்குக் கடல் வழியாகப்போகும் ஜெர்மன் துருப்புகளைத் தடுக்க பிரிட்டிஷ் கடற்படைக்கு சரியான விமான பலம் இல்லை;

விமானத்துணை உதவியில்லை.

ஜெர்மானியத் துருப்புகள் சூடாவிரி குடாவைத்தாண்டி முன்னேறிவந்திருந்தன. கிரீட்தீவின் கிழக்கு ஜெர்மானியர்கள் தாக்குவார்கள் என்று எதிர்பார்க்கப்பட்டது. கீழேபாய்ந்து வெடிகுண்டு போடும் ஜெர்மன் விமானங்கள், பிரிட்டிஷ் தரைப்படைகளை பலமாய்த்தாக்கின. தரைப் படைகளுக்கு ஆகாய விமானத்துணை உதவி இல்லை. அப்படியிருந்தும், அவைகள் மிகுந்த தைரியத்தோடு போராடின. எதிரிகளுக்குப் பல சௌகரியங்கள் இருந்தன. கீழேபாய்ந்து வெடிகுண்டுபோடும் விமானங்கள், துருப்புகளைக்கொண்டுசெல்லும் விமானங்கள், விமான விரிப்புக்குடை வழியாக இறங்கும் துருப்புகள்—இவைகளினால்தான் அவர்கள் கிரீட்டைக் கைப்பற்றினார்கள்.

நேசதேசத்தார்கள் எதிர்த்துப்போராடும் விமானங்களை வைத்திருந்தும், அவைகள் கிரீட்டில் உபயோகிக்கமுடியவில்லை. பிரிட்டனிடம் ஏராளமான போர் புரியும் விமானங்களும், வெடிகுண்டு விமானங்களும் இருக்கின்றன. அவைகள் பிரிட்டனிலும், மத்திய கிழக்கரங்கத்திலும் நன்றாக உபயோகப்பட்டு வருகின்றன. ஆனால் கிரீட்டில் உபயோகிக்க முடியாத காரணம் அந்தத் தீவின் பூகோள ஸ்தானம்தான். பிரிட்டிஷ் கடற்படைக்கு சரியான விமான உதவியில்லை. சரியான விமானபலம் இருந்தால், எந்த பட்டாளமும் எதிரிகளின் கடற்படை பலத்தைத் தாண்டிச்செல்ல முடியும் என்ற விஷயம் இப்போது விளக்கமாகத் தெரிந்துவிட்டது. ஜெர்மனி அதிக நஷ்டமடைந்தது:

ஆனால், ஒரு விஷயத்தை நாம் நினைவில் வைத்துக்கொள்ளவேண்டும்; மத்திய கிழக்கரங்க யுத்தம் முடிந்துவிடவில்லை; முடிவுக்கு வரும்படியான நிலைமையும் அடையவில்லை. கிரீட்டில் பிரிட்டன் நடத்திய எதிர்ப்பினால், மத்திய கிழக்கரங்கத்தில் இருந்த ராணுவ அமைப்புகளைப் பலப்படுத்திக்கொள்ளும்படியான ஒரு சந்தர்ப்பம் ஏற்பட்டது. வேறு யுத்த அரங்கங்களிலிருந்து, தென்னாப்பிரிக்கத் துருப்புகள் எகிப்துக்கு வந்து சேர்ந்தன.

வெளிப்போக்கில் வெற்றி.

வெளிப்போக்கில் உள்ள கேந்திர ஸ்தானங்களில், ஜெர்மானியர்களை எவ்வளவு காலதாமதம் செய்ய முடியுமோ, அவ்வளவு காலதாமதம் செய்வது; அந்தக் காலத்தை உட்போக்கில் உள்ள, முடிவை நிச்சயிப்பதற்கு முக்கியமான, கேந்திர ஸ்தானங்களைப் பலப்படுத்துவதற்கு உபயோகிப்பது—இதுதான் இப்போது பிரிட்டிஷ் கொள்கையாயிருக்கிறது. கிரீஸ், கிரீட், சிரிநீகா, முதலிய இடங்கள் ஒரு கோட்டையின் வெளிப்பக்கத்திலுள்ள கேந்திர ஸ்தானங்களாகக் கருதலாம். இந்த வெளி ஸ்தானங்களை எவ்வளவு நீடித்தகாலம் எதிர்த்துப் பாதுகாக்கமுடியுமோ, அவ்வளவு காலம் பாதுகாத்தால், கோட்டைக்குள்ளிருக்கும் துருப்புகள் தங்களுடைய பலத்தைச் சேகரித்து, திறமையான வழியில் உபயோகிப்பதற்கு, தகுந்த அவகாசம் இருக்கிறது.

கிரீட்டில் பிரிட்டனுக்குப் பெருத்த நஷ்டம் ஏற்பட்டிருந்தாலும், அந்த நஷ்டத்தை ஈடுகட்டும்படியான லாபங்களையும் அடைந்திருக்கிறதென்று சொல்லலாம். அபிசீனியாவைக் கைப்பற்றியது; ரஷீத் அலியைத் துரத்திவிட்டு இராக் 'சடலை' பாதையை மீண்டும் திறந்துவிட்டது; மடாபன் என்ற இடத்தில் இத்தாலிய கடற்படையை, போர்புரிவதற்கு பிரயோசனமில்லாமல் செய்துவிட்டது—இவைகளெல்லாம் பிரிட்டனுடைய லாபக் கணக்கில் இருக்கின்றன. இதல்லாமல், பிரிட்டன் 'ஹுட்' என்ற கப்பலை இழந்தது; அதற்குப்பதிலாக, 'பிஸ்மார்க்' என்ற ஜெர்மன் கப்பல் முழுகடிக்கப்பட்டது. 'ஷாரின் ஹார்ஸ்ட்', 'நீசனோ' என்ற இரண்டு பெரும் ஜெர்மன் யுத்தக் கப்பல்கள் பிரிட்டிஷ் விமானங்களால் பழுதாக்கப்பட்டு, போர் செய்வதற்குப் பிரயோசனமில்லாமல் செய்யப்பட்டன. அமெரிக்காவினுடைய உதவி அதிகரித்துக்கொண்டு வருகிறது; கடற் பாதுகாப்புத்திட்டம் பலப்படுத்தப் பட்டிருக்கிறது. மத்திய கிழக்கரங்க யுத்தமும், அட்லாண்டிக் கடல் யுத்தமும் மும்முரமாக நடைபெற்று வருகின்றன.

1940 மேஷத்தையும், 1941-மேஷத்தையும் ஒத்திட்டுப்பார்த்து, லாப நஷ்டங்களைக் கணக்கெடுத்துப் பார்ப்போம். போன வருஷம் மே மாதத்திற்குள் நார்வே, டென்மார்க், ஹாலந்து, பெல்ஜியம் முதலிய நாடுகளை ஜெர்மனி பிடித்துக்கொண்டது. டன்கர்க்கைவிட்டு பிரிட்டிஷ் துருப்புகள் பின் வாங்கிச் சென்றன. பிரான்சு சரணாகதியடையப்போகும் சமயம், இத்தாலி யுத்தத்தில் ஈடுபடும் சமயம்—அப்போது, நார்வீஜிய யுத்தத்தில், 4 ஜெர்மன் யுத்தக் கப்பல்களும், 12 ஜெர்மன் நாசகாரிகளும் பிரிட்டனால் அழிக்கப்பட்டன. இந்த வருஷம், யூகோஸ்லாவியா, கிரீஸ், சிரிநீகா, கிரீட் முதலிய பிரதேசங்களை ஜெர்மனி கைப்பற்றிக்கொண்டது. பிரிட்டிஷ் கப்பல் 'ஹுட்' முழுகடிக்கப்பட்டது; பிரிட்டனுக்கு அநேக கப்பல்கள் நஷ்டமாய் விட்டன. ஆனால், பிரிட்டன் 5 லட்சம் சிப்பாய்களடங்கிய இரண்டு இத்தாலிய பட்டாளங்களை அபிசீனியாவில் அழித்துவிட்டது; ரஷீத் அலியை இராக்கிலிருந்து துரத்திவிட்டது; மீதியாயுள்ள இத்தாலிய கப்பற்படை வெளியில் வந்து போர் புரிவதற்கு அஞ்சி ஒளிந்துகொண்டிருக்கும்படியான நிலைமையை ஏற்படுத்திவிட்டது. 'பிஸ்மார்க்' என்ற பிரம்மாண்டமான ஜெர்மன் யுத்தக் கப்பல் முழுகடிக்கப்பட்டது. பிரிட்டனுக்கும், மத்திய கிழக்கரங்கத்துக்கும், அமெரிக்க உதவி வந்துகொண்டேயிருக்கிறது.

ரகசிய ஆயுதங்கள்.

சென்ற வருஷம், தரைப்படைகளிலும், ஆகாய விமானப்படைகளிலும், ஜெர்மனி மிகுந்த பலமுடையதாயிருந்தது. இந்த வருஷம், நேசதேசத்தார்களின் ஆகாய விமான பலம் ஜெர்மனிக்குச் சமமாய் இருக்கிறது; நேசதேசத்தார்களின் யுத்தப் படை பலமும் விரைவாக அதிகப்பட்டுக்கொண்டே வருகிறது. சென்ற வருஷம் ஜெர்மனியின் ரகசிய ஆயுதங்கள், பலமான பீரங்கிகளுடைய 'டாங்கி'களும், ஸ்டுகா என்ற கீழ்நோக்கிப்பாயும் வெடிகுண்டு விமானங்களும்தான். இந்த வருஷம் புதிய ரகசிய ஆயுதங்கள் ஜெர்மனியிடம் ஒன்றையும் காணோம். ஆனால் நேசதேசத்தார்கள் அதிவேகமுள்ள புதிதான வெடிகுண்டுகளையும், இரவில் போர்புரியும் புதுமுறையான ஆகாய விமானங்களையும் உபயோகித்தார்கள்; இது ஜெர்மானியர்களுக்கு ஆச்சரியத்தை உண்டாக்கியதாகத் தெரிகிறது. நேசதேசத்தார்களின் ஒற்றுமையும், உறுதியும் முன்பிருந்ததைவிட அதிகமாக வளர்ந்துகொண்டு வருகிறது. ஜெர்மனியின் உற்பத்தி உச்ச நிலையைத்தாண்டிவிட்டது. ஆனால், பிரிட்டனும், அமெரிக்காவும் நாளுக்குநாள் விருத்தியடைந்து, உற்பத்தியை அதிகப்படுத்தி, உச்ச நிலையை அடையும் நிலையில் இருக்கின்றன.

பிரிட்டன் இதுவரைக்கும் தோற்கடிக்கப்படவில்லை; இனிமேலும் தோற்றுப்போவதில்லை. ஜெர்மனி ஜெயிக்கவேண்டுமானால், பிரிட்டனில் பிரிட்டனைத் தோற்கடிக்கவேண்டும்.

சென்ற வருஷம், அமெரிக்கா தனிப்பட்டு நின்றது; ஆனால், இந்த வருஷம், ஒரு பெரிய புரட்சி ஏற்பட்டிருக்கிறது. பிரிட்டனுக்கு எவ்வளவு உதவி செய்ய வேண்டுமோ அவ்வளவு உதவியும் செய்ய வேண்டுமென்று அமெரிக்க மக்கள் வற்புறுத்துகிறார்கள். இதனால், அமெரிக்காவே யுத்தத்தில் ஈடுபட்டாலும் நல்லதுதான் என்று சொல்லுகிறார்கள். பிரிட்டன் முடிவில் வெற்றியடைவதற்கு இது ஒரு முக்கியமான காரணமென்று சொல்லலாம்.

குறிப்பு.—யுத்த சஞ்சிகையின் பிரதிகளைத் தயவுசெய்து ஒன்றின்பின் ஒன்றாக விடாமல் சேர்த்துவரவும்.
[சென்னை இன்பர்மேஷன் டைரெக்டர் அவர்களால் அன்புடன் அளிக்கப்பட்டது.]

MADRAS : PRINTED BY THE SUPERINTENDENT, GOVERNMENT PRESS.